புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 223 | 17-02-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volume 01 | Issue: 223 | 17-02-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## வளர்ந்த நாடாக உருவாக நாங்கள் ஆவலுடன் உள்ளோம் என்பதை இந்த பட்ஜெட் காட்டுகிறது: பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி: பிப்.17–

இந்த ஆண்டு மத்திய பட்ஜெட் குறித்து பிரதமர் மோடி கூறியதாவது: "நமது நாட்டில் திறன் மிகு இளைஞர்கள் அதிகளவில் உள்ளனர். குறைந்த பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைத் தன்மையுடன் கூடிய வலுவான வளர்ச்சியில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். விண்வெளி, விளையாட்டு, ஸ்டார்ட் அப்கள் எனப் பல்வேறு துறைகளில் நமது இளைஞர்கள் சாதனை படைத்து வருகின்றனர்.

இந்த முன்னேற்றங்களின் காரணமாக, மக்கள் தற்போதைய சூழலை, இந்தியாவுக்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பாகப் பார்க்கிறார்கள். இந்த முன்னேற்றங்கள் வேகம் எடுத்துள்ள நிலையில், நாடு 75வது சுதந்திர தினத்தை கடந்துள்ளது. ஒரு வளர்ந்த நாட்டை உருவாக்குவது என்பது வெறும் உள்கட்டமைப்பு அல்லது பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்ல, அது தூய்மை உட்பட பல சமூகப் பழக்க வழக்கங்கள் சார்ந்தது என்பதையும் மக்கள் அறிந்துள்ளனர்.இந்த பட்ஜெட் கட்டாயத்தினால் உருவான கணக்கு புத்தக பட்ஜெட் அல்ல. தயார் நிலை மற்றும் உத்வேகத்தால் வளர்ந்த நாடாக உருவாக நாங்கள் ஆவலுடன் உள்ளோம் என்பதை பிரதிபலிக்கும் பட்ஜெட்.

எனவே, இந்த பட்ஜெட்டை வெறும் 'பட்ஜெட் 2026' ஆக மட்டும் பார்க்காமல், 21ம் நூற்றாண்டின் 2வது காலாண்டின் முதல் பட்ஜெட்டாகப் பார்க்க வேண்டும். நாம் இப்போது எடுக்கும் முடிவுகள் 2047க்குள் வளர்ச்சியடைந்த பாரதம் உருவாக அடித்தளம் அமைக்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் பெண்கள் முக்கிய பங்காற்றுவர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

பெண் குழந்தைகள் பிறப்பது முதல், அவர்களின் எண்ணங்கள் நிறைவேறும் வரை முன்னேற்றத்துக்கு தேவையான நடவடிக்கைகளையும், சீர்திருத்தங்களையும் அரசு செய்து கொண்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பெண்கள் முன்னணியில் உள்ளனர் என்பது பெருமையான விஷயம். விண்வெளித் துறையாக இருக்கட்டும் அல்லது ஸ்டார்ட் அப் நிறுவனங்களாக இருக்கட்டும், அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறப்பாக பணியாற்றுகின்றனர்.

2014 முதல் முந்தைய நிர்வாகங்கள் விட்டுச் சென்ற கட்டமைப்பு இடைவெளிகளை நாங்கள் சரி செய்துள்ளோம், பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தியுள்ளோம். நமது விவசாயிகளின் கண்ணியத்தை உறுதி செய்துள்ளோம். இந்த பட்ஜெட் வேகத்தை அதிகரிக்கவும், வேகமாக மாறிவரும் உலகின் வாய்ப்புகளுக்கு ஏற்ப நமது இளைஞர்களைத் தயார்படுத்தும் நோக்கிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

## நடிகை திரிஷா குறித்து பேசியதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன்: நயினார் நாகேந்திரன் பேட்டி

நடிகை திரிஷா கண்டனம் தெரிவித்த நிலையில், தனது பேச்சுக்கு நயினார் நாகேந்திரன் வருத்தம் தெரிவித்தார். என்னுடைய அரசியல் வாழ்க்கையில் தனிப்பட்ட முறையில் யாரையும் நான் விமர்சித்தது இல்லை. எந்த ஒரு தனி மனித விமர்சனத்தையும் நான் அனுமதிப்பதுமில்லை; நான் பேசியதுமில்லை. அன்றையதினம் வாய் தவறி வந்த வார்த்தை என கூறினார்.

யார் மனதும் புண்படும் விதத்தில் பேசியிருந்தால் மனப்பூர்வமாக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். திரிஷா பற்றி பேசியதற்காக அகில இந்திய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன், அண்ணாமலை உள்ளிட்டோர் என்னிடம் பேசினார். யாரேனும் இந்த விவகாரத்தில் வருத்தப்படுகிறார்கள் என்றால், என் வருத்தத்தை நான் மனப்பூர்வமாக தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## கோவை மோட்டார் பைக்ஸ் புதிய இரு சக்கர வாகன துவக்க விழா தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி பங்கேற்பு!!



கோவை:பிப்17

கோவை போத்தனூர் சாலையில் கோவை மோட்டார் பைக்ஸ் எனும் இரு சக்கர வாகன விற்பனை மையத்தை தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி துவக்கி வைத்தார்

போத்தனூர் சாலையில் உள்ள ராசி ஃபுட் எதிரில் கோவை மோட்டார் பைக்ஸ் எனும் இரு சக்கர வாகன விற்பனை மைய துவக்க விழா நடைபெற்றது..

எல்லா விதமான பைக் மற்றும் ஸ்கூட்டர்கள் விற்பனை மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய சர்வீஸ் பிரிவும் துவங்கப்பட்டுள்ள கோவை பைக்ஸ் புதிய ஷோரூம் துவக்கவிழாவில் சிறப்பு விருந்தினராக தமிழக சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபி கலந்து கொண்டு கோவை பைக்ஸ் ஷோரூமை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்..

விழாவில் அவருடன், கோல்டு பாஷா, ரஹ்மத்துல்லா ,மற்றும் பல்சமய நல்லுறவு இயக்க நிர்வாகிகள் டிஸ்கோ காஜா உசேன் பூக்கடை சுலைமான் பகதூர் அசாருதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்...

புதிதாக திறக்கப்பட்டுள்ள கோவை பைக்ஸ் விற்பனை மையத்தில் முன்னனி நிறுவனங்களின் இரு சக்கர வாகனங்கள் அனைத்தும் விற்பனை செய்யப்படு வதாகவும், அதே நேரத்தில் குறைந்த முன் பணம் கட்டி, எளிதான லோன் வசதிகளுடன், உடனடியாக வாடிக்கையாளர்கள் புதிய வாகனத்தை பெற்று செல்லலாம்என கோவை பைக்ஸ் நிறுவன உரிமையாளர்கள் தெரிவித்தனர்...

## உயர்கல்வித் துறை சார்பில் ரூ.542.02 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை: பிப். 17–

உயர்கல்வித் துறை சார்பில் ரூ.542.02 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்து, ரூ.555.92 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல்விசார் கட்டடங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (16.02.2026) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில். அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றில் 542.02 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள்,பணிமனை கட்டடங்கள். மகளிர் விடுதிக் கட்டடம், திறன்மிகு மையங்கள் போன்ற பல்வேறு கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில அரசு பொறியியல் கல்லூரிகள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கட்டப்படவுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், பல்நோக்கு அரங்குகள். விடுதிகள் மற்றும் இதர கட்டடங்களுக்கு அடிக்கல்நாட்டினார்.தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அதிகஎண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள்.

தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல்,"நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல். அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கையில் 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் இடஒதுக்கீடு, முதல்தலைமுறைபட்டதாரிகளுக்கு சலுகைகள். கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

திறந்துவைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் ஒரு புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி; இராணிப்பேட்டை மாவட்டம் மேல்வெங்கடாபுரம்,கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், சென்னை மாவட்டம் திருவொற்றியூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 42 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்கள்; தருமபுரி மாவட்டம் செட்டிக்கரை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துவாக்குடி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தேனி மாவட்டம் வீரபாண்டி, மதுரை மாவட்டம் செக்கானூரணி, கோயம்புத்தூர் மாவட்டம் தொண்டாமுத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் தென்னாங்கூர், செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கல்லூரிகளில் 45 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 34 வகுப்பறைகள் 19 ஆய்வகங்கள்,பணிமனை,மகளிர் விடுதி மற்றும் இதர கட்டடங்கள்; சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள ஐந்து அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் 255 கோடி ரூபாய் செலவில்கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 திறன்மிகு மையங்கள்: அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக, 198.84 கோடி ரூபாய் செலவில் கற்றல் மேலாண்மை அமைப்புடன் ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருள்;

என மொத்தம் 542.02 கோடி ரூபாய் செலவிலான உயர்கல்வித்துறை சார்ந்த 15 கட்டடங்களை திறந்து வைத்து, ஒருங்கிணைந்த நிறுவன வள மேலாண்மைக்கான மென்பொருளை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கிவைத்தார். அடிக்கல்நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர், ஈரோடு மாவட்டம் அந்தியூர்,கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் நத்தம், திருவாரூர்மாவட்டம்கூத்தாநல்லூர், பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம், தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், சிவகங்கைமாவட்டம்மானாமதுரை, கடலூர் மாவட்டம் பண்ருட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 180 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்:

தென்காசி மாவட்டம் தஞ்சாவூர் மாவட்டம்பேராவூரணி,செங்கிபட்டி, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, கடலூர் மாவட்டம் சிதம்பரம், திட்டக்குடி,கடலூர்,கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம், ஈரோடு மாவட்டம் திட்டமலை, ஈரோடு, தூத்துக்குடி மாவட்டம் கோவில் பட்டி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், கன்னியாகுமரி, கடையநல்லூர்,விருதுநகர்மாவட்டம் சிவகாசி, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை, சென்னை நந்தனம், மாநிலக் கல்லூரி, தரமணி, இராமநாதபுரம்மாவட்டம்பரமக்குடி, நீலகிரி மாவட்டம் உதகமண்டலம், செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கம், குரோம்பேட்டை, நாமக்கல் மாவட்டம் இராசிபுரம், நாமக்கல்,தர்மபுரி மாவட்டம் அரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி, சேதுராபட்டி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தேனி மாவட்டம் போடிநாயக்கனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் மாவட்டம் ஜோலார்பேட்டை, அரியலூர் மாவட்டம் பர்கூர், திருப்பத்தூர் கீழப்பழுவூர், அரியலூர், மயிலாடுதுறை சேலம் சூரர் வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு கல்லூரிகளில் 375 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 437 வகுப்பறைகள், 19 பல்நோக்கு அரங்குகள், விடுதிகள் மற்றும் இதர கட்டடங்கள்; என மொத்தம் 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உயர்கல்வித்துறை கட்டடங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் இன்றையதினம் வேளாண்மை உழவர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயர்கல்வித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் மொத்தம் 1210.52 கோடி ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்து, 555.92 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 43 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்புக்கூட்டு மையங்களுக்கான மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இ.ஆ.ப.. உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப.,கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச.விசாகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பூண்டி, எல்லாபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் பயனாளிகளுக்கு வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்



திருவள்ளூர் பிப் 17 :

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி, எல்லாபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகளை பயனாளிகளுக்கு வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் பயனாளிகளை நேரில் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைப்படி கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 2025 26 ஆம் ஆண்டிற்கு திருவள்ளூர் மாவட்டத்தில் கூடுதலாக 5100 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு மற்றும் திட்ட செயலாக்கத்தின் படி ஊராட்சி அளவிலான குழுவின் மூலம் தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்து, தேர்வு செய்யப்பட்ட பயனாளிகள் பெயர் பட்டியல் ஒப்புதல் பெறும் பொருட்டு திருவள்ளூர் மாவட்ட அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் வருகின்ற 17.02.2026 அன்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப் பூண்டி ஊராட்சி ஒன்றியம், பூண்டி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகளை பயனாளிகளுக்கு வழங்குவது தொடர்பாக பயனாளிகளை நேரில் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர் எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், செஞ்சியகரம் ஊராட்சி ஒடக்கண்டிகை இருளர் குடியிருப்பு, லச்சிவாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் பயனாளிகளை நேரில் சந்தித்தார். இறுதியாக திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், கரிக்கலவாக்கம் ஊராட்சி, கீழானூர் ஊராட்சி, தலக்காஞ்சேரி ஊராட்சி ஆகிய பகுதிகளில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகளை பயனாளிகளுக்கு வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் பயனாளிகளை நேரில் சந்தித்து விவரங்களை கேட்டறிந்தார்.

இதில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள் (ம) தணிக்கை) (திருவள்ளூர் கிழக்கு) சு.பஞ்சு, உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) கோவேந்தன், எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் மணிசேகர்,திருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வகுமார், ஜானகி, பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சுலோச்சனா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை தெலுங்குபாளையம் பகுதியில் ரூ 1.48 கோடி மதிப்பில் சுகாதார நிலையத்தை திறந்து வைத்த அமைச்சர் மா சுப்பிரமணியம்



கோவை. பிப்17

தெலுங்குபாளையம் பகுதியில் ரூ 1.48 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியம் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதில் கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி,மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன்,துணை மேயர் வெற்றிச்செல்வன், பொதுசுகாதார குழு தலைவர் மாறிச்செல்வன், தெற்கு மண்டல தலைவர் தனலட்சுமி, 76 வது வார்டு மாமான்ற உறுப்பினர் ராஜ்குமார், பகுதி செயலாளர் எஸ் மணி ஒப்பந்ததாரர் கி விஜயகுமார் மற்றும் மாநகராட்சி அலுவலகர்கள் மருத்துவ அலுவலகர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# 100 நாள் வேலைத் திட்டத்தைப் பாதுகாக்க புதுச்சேரி காங்கிரஸ் சார்பில் பிரம்மாண்ட ‘அறவழிப் போராட்டம்‘ : அரியாங்குப்பத்தில் திரண்டனர்!



புதுச்சேரி | பிப். 17

புதுச்சேரி பிரதேச காங்கிரஸ் கமிட்டி மற்றும் ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கதன் (RGPRS) சார்பாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தைப் (MGNREGA) பாதுகாக்கவும், மத்திய அரசின் திட்டக் குறைப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும் “MGNREGA BACHAO SANGRAM” எனும் மாபெரும் பாதுகாப்புப் போராட்டம் இன்று அரியாங்குப்பம் பிரம்மன் சிலை அருகே நடைபெற்றது.

ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் சங்கதன் மாநிலத் தலைவர் சு. அமுதரசன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்கு, புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் M. வைத்திலிங்கம் MP, முன்னாள் முதல்வர் நாராயணசாமி, முன்னாள் அரசு கொறடா ஆர்.கே.ஆர். ஆனந்தராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மத்திய அரசு MGNREGAதிட்டத்தைச் சிதைப்பதாகக் குற்றம் சாட்டி, போராட்டத்தில் பின்வரும் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன:

திட்டத்தின் பெயரிலிருந்து நீக்கப்பட்ட “மகாத்மா காந்தி” என்ற பெயரை மீண்டும் இணைக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்திற்கும் சமரசமின்றி 100 நாட்கள் வேலை வழங்கப்பட வேண்டும்.

தேங்கியுள்ள வேலை நாட்களை உடனடியாக வழங்குவதுடன், ஊதியத்தை எவ்விதத் தாமதமுமின்றி வழங்க வேண்டும்.

கிராமப்புறத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தின் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும்.

இந்த அறப் போராட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் சங்கர், விஜயலட்சுமி ஜெயமூர்த்தி, வட்டாரத் தலைவர் ஐயப்பன், RGPRS துணைத் தலைவர் கோவிந்தன், சங்கர் பாபு, மாநில பொதுச் செயலாளர் சிவபாலன், மாநில செயலாளர் ஷேக் மொய்தீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேலும், மாநில ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், பொதுச் செயலாளர்கள் பாஸ்கர், சிவசங்கரன், வழக்கறிஞர் சத்தியசீலன், ஹேமாவதி செல்வம், சசிகுமார் மற்றும் மாவட்ட, தொகுதி நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் பெருந்திரளானோர் பங்கேற்று மத்திய அரசுக்கு எதிராகப் பெருமுழக்கமிட்டனர்.

புதுச்சேரியின் லட்சக் கணக்கான கிராமப்புறக் குடும்பங்களின் கௌரவத்தையும், வாழ்வாதாரத்தையும் காக்க இந்த நீதிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், மக்களின் உரிமைகள் கிடைக்கும் வரை காங்கிரஸ் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும் என்றும் தலைவர்கள் உரையாற்றினர்.

# திருச்சியை இரண்டாவது தலைநகரமாக அறிவிக்க வேண்டும் திமுக துணை பொதுச்செயலாளர்கனிமொழி எம்.பி.யிடம் துரை வைகோ எம்பி கோரிக்கை மனு:

திருச்சி பிப் 17

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், 2026 சட்டமன்றத் தேர்தல் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி.யை

மதிமுக தலைமை நிலைய செயலாளரும் திருச்சி எம்பி ஆன துரை வைகோ சந்தித்து, வரவிருக்கும் திமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்க வேண்டிய ஆறு முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார்.

அதில், திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு தனிதமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் போக்குவரத்துப் பிரிவு உருவாக்க வேண்டும்.

திருச்சியை தமிழ் நாட்டின் இரண்டாம் தலைநகரமாக அறிவிக்க வேண்டும்

திருச்சிக்கு மெட்ரோ ரெயில் சேவை அமைப்பதில் முன்னுரிமை.

திருச்சியில் பல்கலைக் கழக நகரம் அமைத்தல்.

திருச்சி–மணப்பாறை சிப்காட்டை உலகளாவிய மின்னணு மற்றும் உற்பத்தி மையமாக மேம்படுத்தல்.

தலைநகர் டெல்லியில், டெல்லி பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில வரும் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள தமிழக மாணவ/ மனைவியருக்கு தனி விடுதி அமைத்து தரவும் மற்றும் இலவச மடிக்கணினி வழங்கல்

ஆகிய கோரிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் முன்னேற்றத்திற்கும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கும் இவை மிகவும் அவசியமான திட்டங்கள் ஆகும்

இந்த கோரிக்கைகளை ம கனிமொழி எம்பி கவனமாக கேட்டறிந்து, திமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்க பரிசீலனை செய்ய உறுதியளித்ததாக துரை வைகோ எம்பி கூறியுள்ளார்.

## தமிழகம் முழுவதும் மசூதிகளில் நடை பெறும் இரவு நேர சிறப்பு தொழுகைக்கு வரும் இஸ்லாமியர்களுக்கு பாதுகாப்பு தேவை முதல்வருக்கு காயல் அப்பாஸ் கோரிக்கை !

காயல் பட்டிணம் பிப் :17

இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



வருகிற 19 02 2026 வியாழக்கிழமை அன்று புனித ரமலான் மாதம் நோன்பு துவங்க உள்ளதால் இஸ்லாமியர்கள் அனைவரும் ரமலான் மாதத்தில் 30 நாட்களும் விடியற் காலை முதல் மாலை வரையிலும் நோன்பு இருந்து அதன் பின் மாலையில் நோன்பு திறந்து இரவு நேரம் மசூதிகளில் சிறப்பு தொழுகைகளும் நடை பெறுகின்றன.

மேலும் ரமலான் மாதத்தில் அடிக்கடி மின்சாரம் தடை ஏற்பட்டால் நோன்பு வைத்திருக்கும் இஸ்லாமியர்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக படுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு தடை இல்லா மின்சாரம் 30 நாட்களுக்கும் வழங்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது.

தமிழகம் முழுவதும் மசூதிகளில் நடை பெறும் இரவு நேர சிறப்பு தொழுகைக்கு பெண்கள்,மற்றும் ஆண்களும் வருகின்றனர், ஆகவே அவர்களுக்கு எந்த வித அசம்பாவிதமும் நடைபெறாமல் அதனை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறப்பு தொழுகைகள் முடியும் வரையிலும் காவல் துறை பாதுகாப்பு வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்,மேலும் இரவு நேரங்களின் சிறு சிறு தேநீர் கடைகளை இயக்க அனுமதி வழங்க வேண்டும் என தமிழக முதல்வர் மு .க ஸ்டாலின் அவர்களை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பாக கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.




ஈரோடு மாவட்டத்தில் உள்ள அருள்நெறி திருப்பணி மன்றம் உயர்நிலை பள்ளியில் நடைபெற்ற மாவட்ட அளவில் சதுரங்க போட்டியை SRIMOZHI CHESS ACADEMY நடைபெற்றது இதில் ஆர்வமுடன் மாணவ மாணவியர் பங்கு பெற்று பரிசுகளை பெற்றனர் இதில் சிறப்பு விருந்தினராக டாக்டர் எஸ்.ரமேஷ் செயலாளர்,EDCC, இணைச் செயலாளர்,TNSCA மற்றும் திருநாவுக்கரசு செயலாளர் அருள்நெறி திருப்பணி மன்றம் உயர்நிலை பள்ளி பங்குபெற்று சிறப்புரையாற்றினார்....

# பழங்குடி இருளர் குழந்தைகளுக்கான விளையாட்டு விழா2026



விழுப்புரம், பிப். 17–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் கவரை ஊராட்சியில் இயங்கி வரும் பலவை பழங்குடியினர் மையத்தில் பிப்ரவரி 15, 2026 ஞாயிற்றுகிழமை அன்று பலவை பழங்குடியினர் அமைப்பானது செஞ்சி அருகே கவரையில் உள்ள பலவை பழங்குடியினர் மையத்தில் பழங்குடி இருளர் குழந்தைகளுக்கான 11ஆம் ஆண்டு விளையாட்டு விழாவை “ஒன்றாக விளையாட.... நன்றாக உறவாட....” என்ற தலைப்பில் ஒருங்கிணைத்தது.

இதில் அனந்தபுரம் உதவி காவல் ஆய்வாளர் திரு. செந்தில் குமார் மற்றும் சிட்டாம்பூண்டி தமிழக மின்பகிர்மானக் கழக உதவி மென் பொறியாளர் கார்த்திக் வாழ்த்துரை வழங்கி விளையாட்டு விழாவைத் தொடங்கி வைத்தனர்.

நிறைவு விழாவில் கணக்கன்குப்பம் லூர்து அன்னை மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் அருட்சகோதரர் லூயிஸ் அலெக்ஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். குழந்தைகள் கல்வியிலும் விளையாட்டு போன்ற பிற திறமைகளிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று சிறப்பு விருந்தினர்கள ஊக்கப்படுத்தி வாழ்த்தினர். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் குழந்தைகள் நாட்டுப்புற நடனம், ஒயிலாட்டம், மௌன நாடகம், ஆங்கில வார்த்தைகள் ஒப்புவித்தல் போன்ற பல்வேறு திறமைகளை வெளிக்கொணர்ந்தனர். இதில் திண்டிவனம், செஞ்சி, மேல்மலையனூர், விக்கிரவாண்டி, கீழ்பென்னாத்தூர், வந்தவாசி, மதுராந்தகம் ஆகிய வட்டங்களில் உள்ள 45 கிராமங் களிலிருந்து 400 க்கும் மேற்பட்ட இருளர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.ஒற்றுமையை வலியுறுத்தக் கூடிய பல்வேறு விளை யாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

பலவை அமைப்பின் இயக்குநர் அருட்பணி. ஆரோக்கியசாமி சே.ச, திட்ட இயக்குநர் அருட்பணி. அந்தோனி ஆனந்த் சே.ச, துணை திட்ட இயக்குநர் யூஜின் சே.ச மற்றும் அமைப்பின் பணியாளர்கள் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.

**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் நிர்வாக நீதிமன்றம்**

அ.3. ந.க.எ. 6806/2025

ராஜம்மாள், க/ பெ. லெக்கையா பூசாரிபட்டி, கண்ணுடையான்பட்டி கிராமம், மணப்பாறை வட்டம். ...மனுதாரர்

வட்டாட்சியர், ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர்

... ..எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரர் தனது கணவரின் முதல் மனைவி செல்லம் என்பவர் மேற்படி முகவரியில் 01.01.1990 அன்று மேல கோட்டை காரன் பட்டி, வடுகப்பட்டி கிராமத்தில் இறந்துவிட்டார் அவரின் இறப்பு பதிவு அரியாமையின் காரணமாக பதிவு செய்யப்படாமல் விடுபட்டு விட்டது என்றும் மேற்படி ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர் | எதிர்மனு தாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட கோரி தாக்கல் செய்துள்ளார் இவ்விளம்பரம் செய்த 15 தினங்களுக்குளாக மனு மீது ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்பமை ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்துமூலம் தெரிவித்துக் கொள்ள | வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைப்பட்சமாக தீர்மானி க்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்.

# நடிகர் விஜய் சேதுபதி நற்பணி மன்றம் சார்பில் இறகுப்பந்து விளையாட்டு போட்டி




செஞ்சி பிப் 17

நடிகர் விஜய் சேதுபதி பிறந்தநாள் விழாவை அவரது ரசிகர்கள் தமிழ்நாடு முழுவதும் விமர்சையாக கொண்டாடி வரும் நிலையில் இன்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அன்பே வா இறகு பந்து உள் விளையாட்டு அரங்கத்தில் செஞ்சி நகர விஜய் சேதுபதி நற்பணி மன்றம் சார்பில் இறகு பந்து விடையாட்டு போட்டி நடைபெற்றது.

செஞ்சி நகர செயலாளர் வல்லரசு சரவணன் தலைவர் பானுப்ரியன் தலைமை தாங்கினர் .

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் புகழேந்தி கலந்து கொண்டு போட்டியினை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கி சிறப்புரையாற்றினார். போட்டியில் பல மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முதல் பரிசாக 10,000 இரண்டாம் பரிசாக 5000 மூன்றாம் பரிசாக 2500 மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டது

இதில் முதல் பரிசை வென்ற திருச்சியை சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு 10000 ரூபாய் ரொக்கமும் கேடயம் வழங்கினார் வாழ்த்தினர்.

நிகழ்ச்சியில் டேன் தொண்டு நிறுவனர் ஜான் வில்லியம்ஸ் மாவட்ட செஞ்சி நகர நிர்வாகிகள் மற்றும் வல்லம் ஒன்றிய நிர்வாகிகள் ஏழில் மாயக்கண்ணன் பிரகாஷ் அருண் கோகுல் மற்றும் மக்கள் செல்வம் விஜய் சேதுபதி நற்பணி மன்ற நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வானூர் தொகுதியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டம்



விழுப்புரம், பிப்.17:

தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் உத்தரவின் பேரில், விழுப்புரம் மாவட்டம் வானூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாக்கம் கூட்டு சாலையில் கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் திராவிட நாகு ஏற்பாட்டில், நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கள்ளக்குறிச்சி – விழுப்புரம் – திருவண்ணாமலை மண்டல பொறுப்பாளர் தா. ஆனந்த் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட நிர்வாகி பன்னையார் பசுபதி, ஒன்றிய செயலாளர்கள் சுரேன், ராஜசேகர் சுமுகன், சோழன், விஜயகுமார், பாலசுப்பிரமணியன் வீராணம் முத்து மைக்கல் உள்ளிட்ட மாவட்ட மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக மாநில அமைப்பு குழு உறுப்பினர் பி.ஜி. சேகர், மாநில தொழிற்சங்க அமைப்பு செயலாளர் ராஜமூர்த்தி, புதுவை மாநில அமைப்பாளர் அருள்ஒளி, மாநில செய்தித் தொடர்பாளர் கண்ணதாசன், புதுவை மாநில இளைஞர் அணி செயலாளர் பகுத்தறிவு MT, திருவண்ணாமலை மாவட்ட அமைப்பாளர் ராஜீ ஆகியோர் கலந்து கொண்டு கட்சியின் கொள்கைகள், மக்கள் நலத் திட்டங்கள் குறித்து விளக்க உரையாற்றினர்.

இறுதியாக, தொகுதி துணை செயலாளர் அஜித்குமார் நன்றி உரையாற்றினார்.



வேலூர் மாவட்டம் மாநகராட்சி வேலப்பாடி வார்டு எண் 33 விநாயகர் கோவில் அருகில் 40 அடி கால்வாய் உள்ளது இந்த கால்வாய் அருகில் வீடுகள் உள்ளன பல ஆண்டுகளாக இந்த கால்வாய் வழியாக வேலப்பாடி சுற்றுவட்டாரத்தில் கழிவு நீர் செல்கின்றன ஆங்காங்கே இருக்கும் குப்பைகளை எடுத்து வந்து இந்த கால்வாயில் கொட்டுகின்றனர் பக்கத்தில் வசிப்பவர்கள் மாநகராட்சியிடம் புகார் செய்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை உடனடியாக இந்தக் கால்வாய் சரி செய்து சுற்றுப்புற சுகாதாரம் பேணி காக்க வேண்டும்

# உழவர்கரை: அன்பு ஆத்ரேயா அறக்கட்டளை அலுவலகம் திறப்பு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் முனைவர் அருள் செழியன்!



புதுச்சேரி , பிப். 17–

உழவர்கரை தொகுதிக்கு உட்பட்ட புது நகர் பகுதியில், அன்பு ஆத்ரேயா அறக்கட்டளையின் புதிய அலுவலகத் திறப்பு விழா (15,02,2026) மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. உழவர்கரை தொகுதியைச் சேர்ந்த முனைவர் அருள் செழியன் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டுள்ள இந்த அறக்கட்டளை, மக்கள் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக என்.ஆர். காங்கிரஸ் பிரமுகர் முரளி அவர்கள் கலந்துகொண்டு, குத்துவிளக்கினை ஏற்றி வைத்து அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்தத் திறப்பு விழாவில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

விழாவின் ஒரு பகுதியாக, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. குறிப்பாக, பாவாணர் நகர் மற்றும் ஜெ.ஜெ. நகர் பகுதிகளைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பயனாளிகள் இதன் மூலம் பயனடைந்தனர்.

மிதிவண்டிகள் 15 பேருக்கு வாழ்வாதாரப் பயணத்திற்காக வழங்கப்பட்டது. தையல் இயந்திரங்கள் 10 பெண்களுக்கு சுயதொழில் தொடங்கும் வகையில் வழங்கப்பட்டது. தார்பாய்கள் 5 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நலத்திட்ட உதவிகள் அனைத்தும் எந்தவொரு அரசு உதவியும் இன்றி, முனைவர் அருள் செழியன் அவர்கள் தான் மாதந்தோறும் ஈட்டும் வருமானத்திலிருந்து, தனது சொந்தச் செலவில் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது இந்தச் செயலை அப்பகுதி மக்கள் நெகிழ்ச்சியுடன் பாராட்டி வருகின்றனர்.

# ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் தலைமையில் MLA வேட்பாளருக்கு பதவி வழங்கும் விழா



2021 ஆம் ஆண்டு தட்டாஞ்சாவடி தொகுதியில் MLA வேட்பாளராக போட்டியிட்ட புதுச்சேரி 15.2.2026 அன்று ஏழை மக்கள் கழகத்தின் புதுச்சேரி மாநில அமைப்புச் செயலாளராக ஐயா K.முருகன் லாஸ்பேட்டை தொகுதி ஜீவானந்தபுரம் அவர்களுக்கு பதவி வழங்கி கழக பணியும் மக்கள் சேவையும் சிறப்பாக செய்திட அனைவரும் அவருக்கு வாழ்த்துக்கள் தெறிவித்தோம் உடன் ஏழை மக்கள் கழகம் புதுச்சேரி மாநில நிர்வாகிகள் மாநில கழக பொருளாளர் ரமேஷ் மாநில கழக அமைப்பாளர் கருணாகரன் மாநில கழக துணை தலைவர் அண்ணாமலை மாநில கழக துனை செயலாளர் விமல் மாநில கழக இலைஞர் அணி தலைவர் வேல்முருகன் மாநில கழக ஒருங்கினைப்பாளர் சந்தோஷ் தொகுதி தலைவர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துக்கள் தெறிவித்தனர் மேலும் ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் கூறும்போது பொது மக்கள் அனைவரும் நமது கழகத்தில் மக்கள் சேவை செய்யவும் ஒரு உறவுகளாக இனையவேண்டும் அழைப்புக்கு செல் நம்பர் 9944595267




புதுச்சேரி நகராட்சி வாரிசுதாரர்கள் காத்திருக்கும் போராட்டம் நேற்று நான்காம் நாளாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது எங்களது நியாயமான கோரிக்கையான ஒருமுறை தளர்வு அளித்து அனைவருக்கும் பணி வழங்க வேண்டும் தகுதி உள்ள 123 பேருக்கும் பணி வழங்கவும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்த காத்திருப்பு போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது உள்ளாட்சித் துறை நிர்வாகமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எங்களது வாரிசு பணி மீதான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு எங்களுக்கு உடனடியாக பணியாளையை வழங்கிட வேண்டுமென மா.சத்தியன் (தலைவர்)தாழ்மையுடன் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருச்சி மத்திய சிறையில் வார்டனை தாக்கிய சிறை கைதி மீது வழக்கு:

திருச்சி பிப் 17

திருச்சி மாவட்டம், லால்குடி மேல வாளாடி சேர்ந்தவர் மகேஸ்வரன் (வயது 27 )இவர் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் பகுதியில் ஈடுபட்ட குற்ற செயலில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் அடைக்கப் பட்டுள்ளார் இந்த நிலையில் நேற்று மகேஸ்வரன் தன் சிறையில் மின் சாதன பெட்டியை உடைத்து தற்கொலை செய்து கொள்ள முயன்றார் . இதை பார்த்து சிறை வார்டன் சிவா தடுத்தார். அப்போது கைதி மகேஸ்வரன் வார்டனை மின்சாதன பெட்டி கட்டையால் தாக்கி காயப்படுத்தியுள்ளார். இதுகுறித்து சிறை பிரிவு அலுவலர் வெங்கடசுப்ரமணியன் அளித்த புகாரின் பேரில் கேகே நகர் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மஜ்ஜீதேஃ இக்லஸ் மற்றும் சமூக நல அறக்கட்டளை மதரஸா மூன்றாம் ஆண்டு விழா!!!



அனுப்பர்பாளையம். பிப்17

திருப்பூரில் கடந்த 25 வருடங்களாக 15. வேலம்பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் மஜ்ஜீதேஃ இக்லஸ் மற்றும் சமூக நல அறக்கட்டளை மதரஸா மூன்றாம் ஆண்டு விழா நடைபெற்றது.

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான குழந்தைகளுக்கு மார்க்க கல்வி மிகவும் அவசியமான ஒன்றாகும். இதன் அடிப்படையில் அப்பகுதியில் பயணிக்கும் இஸ்லாமிய சகோதரர்கள், சகோதரிகள், அனைவரும் தங்களுடைய குழந்தைகளை மார்க்க கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன் மஜ்ஜீதேஃ இக்லஸ் மற்றும் சமூக நல அறக்கட்டளை மதரஸாவில் குழந்தைகள் மார்க்கக் கல்வி பயின்று வருகிறார்கள்.

அவர்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகளை வழங்கி மாணவர்களைஊக்கப்படுத்தி சிறப்பான முறையில் ஆண்டுவிழா நடைபெற்று வருகிறது. முதல் மூன்று சிறப்பு பரிசுகளாக தினம்தோறும் வருகை தந்த குழந்தைக்கு. மார்க்க கல்வியில், குர்ஆனை முழுமையாக பயின்று வெற்றி பெற்ற மாணவருக்கு, வாழ்க்கையில் ஒழுக்கம் மிகவும் அவசியம் என்ற கருத்துடன் ஆசிரியரை பேணி வந்த மாணவருக்கு மூன்று நபர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

மதரஸா குழந்தைகளுக்கு அனைவருக்கும். நற்சான்றிதழ்! மெடல்! பரிசுகள் வழங்கப்பட்டது.

மூன்றாம் ஆண்டு விழாவை. தலைவர் அப்துல் சமத், செயலாளர் ரபீக், பொருளாளர் சித்திக்,மற்றும் உறுப்பினர்கள். ஏற்பாடு செய்திருந்தனர். ஹஜரத். முகமது தஸ்லீம் மார்க்க கல்வி பயின்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்..

முன்னாள் பள்ளிவாசல் தலைவர் முபாரக் அலி, அவர்களின் நினைவுகளை போற்றும் விதமாக அவரது மனைவியிடம் நற்சான்றிதழ் வழங்கப்பட்டது. அப்பகுதியில் உள்ள இஸ்லாமியர்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் குடும்பத்துடன் மதரஸாமூன்றாம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு மதியம் அறுசுவை விருந்தில் அனைவரும் கலந்து கொண்டனர்.

# அரியாங்குப்பத்தில் முதலாம் ஆண்டு பிளாஸ்டிக் கைப்பந்து போட்டி:

## பாண்டியன் பிரதர்ஸ் அணி சாம்பியன்!

புதுச்சேரி, பிப். 17–

அரியாங்குப்பம் RK ஃபிரண்ட்ஸ் ‘B’ டீம் சார்பில் நடத்தப்பட்ட முதலாம் ஆண்டு பிளாஸ்டிக் கைப்பந்து போட்டி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான அணிகள் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதியில் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன.




சிறப்பாக விளையாடி முதலிடம் பிடித்த பாண்டியன் பிரதர்ஸ் அணிக்கு, மக்கள் சட்டமன்ற உறுப்பினர் A. பாஸ்கர் (Ex.MLA) அவர்கள் முதல் பரிசை வழங்கி கௌரவித்தார்.

இரண்டாம் இடம் பிடித்த சங்கர் பிரண்ட்ஸ் அணிக்கு, பாஜக சிறப்பு அழைப்பாளர் L. சந்திரமோகன் அவர்கள் பரிசு வழங்கினார்.

மூன்றாம் இடம் வென்ற ஆனந்த் பிரதர்ஸ் அணிக்கு, அரியாங்குப்பம் தொகுதி தலைவர் A. வசந்த ராஜ் அவர்கள் பரிசு வழங்கினார்.

நான்காம் இடம் பிடித்த தினேஷ் பிரண்ட்ஸ் அணிக்கு, OBC மாவட்ட துணைத் தலைவர் R. செந்தில் அவர்கள் பரிசு வழங்கினார்.

ஐந்தாம் இடம் பிடித்த SN பிரண்ட்ஸ் அணிக்கு, அரியாங்குப்பம் தொகுதி துணைத் தலைவர் அன்பு அவர்கள் பரிசு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக அரியாங்குப்பம் அதிமுக தொகுதி கழக செயலாளர் S. ராஜா (எ) வேலுசாமி அவர்கள், S. ஆனந்தகுமார் அவர்கள் மற்றும் அரியாங்குப்பம் தொகுதி இளைஞரணி தலைவர் அருண் ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

மேலும், இந்நிகழ்வின் போது பாஜக நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பலர் உடனிருந்து சிறப்பித்தனர். போட்டிக்கான ஏற்பாடுகளை RK ஃபிரண்ட்ஸ் ‘B’ டீம் உறுப்பினர்கள் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.

# முதல்வர் உயர்த்தி அறிவித்த ரூ. 8 ஆயிரம் சம்பளத்தை உடனே வழங்க வலியுறுத்தி ஆஷா பணியாளர்கள் போராட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பங்கேற்பு



புதுச்சேரி, பிப். 17–

பணி நிரந்தரம் மற்றும் முதல்வர் உயர்த்தி அறிவித்த ரூ. 8 ஆயிரம் சம்பளம் வழங்க வலியுறுத்தி புதுச்சேரியில் பணியாற்றும் ஆஷா பணியாளர்கள் பணியை புறக்கணித்து சுகாதார இயக்குநர் அலுவலக வளாகத்தில் செயல்படும் தேசிய சுகாதார இயக்கத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

சங்கத்தின் தலைவர் அனந்த நாயகி தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்டனப் போராட்டத்தில், செயலாளர் வேல்மதி, நிர்வாகிகள் வள்ளி, சுதா, வைஜெயந்தி, ஜெயபாரதி, மங்கையர்க்கரசி, ப்ரியா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். போராட்டத்தில் கலந்து கொண்ட ஆஷா ஊழியர்கள்,“அறிவிக்கப்பட்ட ரூ.8,000/ ஊதிய உயர்வை தாமதமின்றி வழங்க வேண்டும்”, “உழைப்புக்கு உரிய மதிப்பும், உரிய ஊதியமும் வழங்கப்பட வேண்டும்” என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா போராட்டம் நடத்திய ஆஷா பணியாளர்களுக்கு ஆதரவாக பேசினார். தொடர்ந்து ஆஷா பணியாளர் நிர்வாக இயக்குநரை சந்தித்து உயர்த்தி அறிவிக்கப்பட்ட சம்பளத்தின் கோப்பை காலதாம்மின்றி அரசுக்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அப்போது, முதலியார்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எல்.சம்பத், அரசு ஊழியர்கள் சம்மேளன பிரேமதாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மணவெளி சட்டமன்றத் தொகுதி அபிஷேகப்பாக்கம் பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவருமான திரு செல்வம் ஆர் அவர்கள் இன்று 16.02.2026 திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது நோயாளிகளுக்கு உரிய முறையில் மருத்துவ சிகிச்சையும் மருந்துகளும் கிடைக்கின்றதா என்பது குறித்து நோயாளிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் மருத்துவ அதிகாரிகளிடம் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கவும் அவர்களுக்கு தேவையான மருந்துகளை வழங்கவும் கேட்டுக்கொண்டார்.

# புதுச்சேரி ஸ்ரீமான் வித்யாலயா பள்ளியின் ஆண்டு விழா!

## சட்டமன்ற உறுப்பினர் மற்றும் முதன்மை கல்வி அதிகாரி பங்கேற்பு!



புதுச்சேரி: பிப்.17–

புதுச்சேரி கம்பன் கலையரங்கில், ஸ்ரீமான் வித்யாலயா சர்வதேச மாண்டிசோரி பள்ளியின் (Shreeman Vidyalaya Interna tional Montessori School) ஆண்டு விழா ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 15) மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்குப் பள்ளியின் நிறுவனர் சி. சீதாராமன் தலைமை தாங்கி, விழாவினைத் தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினர்களாகப் பாகூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் RR. செந்தில்குமார் மற்றும் புதுச்சேரி பள்ளிக் கல்வி இயக்ககத்தின் முதன்மை கல்வி அதிகாரி R. குலசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்கள் தங்களது உரையில், மாணவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் கலைத் திறன்களின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்தனர்.

பள்ளித் தலைவர் விக்னேஸ்வரன் சீதாராமன், மேலாண்மை இயக்குநர் நிவேதா விஜயரங்கன் மற்றும் பள்ளியின் முதல்வர் நஸ்ரீன் இப்ராஹிம் ஆகியோரின் முன்னிலையில் விழா இனிதே தொடங்கியது. குத்து விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களின் மனங் கவர்ந்த பரதநாட்டியம், சிலம்பம், நவீன நடனங்கள் மற்றும் ‘ரெயின்போ ஃபிஷ்’ இசை நாடகம் போன்றவை அரங்கேறின. குழந்தைகள் பாதுகாப்பு குறித்த ஊமை நாடகம் (Miming) மற்றும் சமூக விழிப்புணர்வு சார்ந்த நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர் RR. செந்தில்குமார் மற்றும் புதுச்சேரி முதன்மை கல்வி அதிகாரி R. குலசேகரன் ஆகியோர் பள்ளியின் சார்பாகப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினர்.

மாணவர்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்த இந்த விழாவில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் திரளானோர் கலந்து கொண்டனர். இறுதியாகப் பெற்றோர்களுக்கான சிறப்பு நடனம் மற்றும் தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

## கோவையில் ஸ்ரீ ரத்னலட்சுமி கலாஷேத்ரா நாட்டியப் பள்ளியை சேர்ந்த 100 நடனக் கலைஞர்கள் இணைந்து ஒரு மணி நேரம் இடைவிடா சிவ தாண்டவம் நடனமாடி உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்.



கோவை:பிப்17

சிந்தாமணிபுதூர் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் மஹா சிவராத்திரியை முன்னிட்டு "சிவத் தாண்டவம் 2026" என்ற தலைப்பில் பிரம்மாண்டமான உலக சாதனை நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

ஸ்ரீ ரத்னலட்சுமி கலாஷேத்ரா நாட்டியப் பள்ளி சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, அதன் நிறுவனர் மற்றும் புகழ்பெற்ற நாட்டிய குரு "தேவார நாட்டிய ரத்னா" கோமதி என்ற ஸ்ரீலட்சுமி தலைமை தாங்கினார்.

ஒரே நேரத்தில் குழந்தைகள் உட்பட 100 பெண்கள் மேடையில் அணிவகுத்து நின்று, புனித தேவாரத் திருமுறைகளின் பாடல்களுக்கு ஒரு மணி நேரம் இடைவிடாமல் மிகச் சிக்கலான நடன அசைவுகளை ஒற்றுமையுடனும் நேர்த்தியுடனும் ஆடினர். சிவபெருமானின் மகிமையைப் போற்றிய இந்த தேவார மஹா சங்கமம், அரங்கில் கூடியிருந்த பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

இந்த சாதனை, 'ஜாக்கி புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ்' எனும் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தது. உலக சாதனை அமைப்பின் நிறுவனர் ஜேக்கப் ஞானசெல்வன், சி.இ.ஓ எஸ்தர், தலைவர் பிரியா சுரேஷ் குமார் மற்றும் சட்ட ஆலோசகர் எசுரேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர்.

முறையான பயிற்சி, ஒருமித்த ஒத்துழைப்பு மற்றும் கலை மீது கொண்ட பக்தி ஆகியவற்றின் சான்றாக அமைந்த இந்த "சிவத்தாண்டவம் 2026", கோவை மாவட்டத்தின் கலை வரலாற்றில் மறக்க முடியாத மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

# தென்னாங்கூர் அரசு கல்லூரியில் 5.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள்..!



வந்தவாசி, பிப் 17:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூபாய் 5.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட 10 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வக கட்டிடத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். தொடர்ந்து கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வந்தவாசி எம்எல்ஏ எஸ்.அம்பேத்குமார் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் முனைவர் சித.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் நா.மனோ கரன், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் மணி முருகன், ஆங்கில துறைத் தலைவர் சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முனைவர் வ.சந்திரசேகர் கணித துறைத் தலைவர் வரவேற்றார். விலங்கியல் துறைத்தலைவர் மோகன வள்ளி , முனைவர் இரா. பெரியசாமி இயற்பியல் துறைத்தலைவர், தமிழ் துறைத் தலைவர் முனைவர் எழில்வசந்தன், த.சுகந்தி உயிர் வேதியல் துறைத் தலைவர் உள்ளிட்ட அனைத்து துறை ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும்ஒன்றியசெயலாளர் ஆரியாத்தூர் பெருமாள், என்.தினகரசு, பாஸ்கர், யுவராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். மேலும் இந்த நிகழ்ச்சியில் உலகம் உங்கள் கையில் திட்டம் சார்பில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக் கணினிகள் வழங்கப்பட்டது.

# கிருஷ்ணகிரி காவேரிப்பட்டிணம் ஸ்ரீ அங்காளம்மன் பூங்காவனத்து அம்மன் தேர் திருவிழா




கிருஷ்ணகிரி, பிப்.17–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப் பட்டிணத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அங்காளம்மன் பூங்காவனத்து அம்மன் தேர் திருவிழா வருடா வருடம் பக்தர்கள் திரண்டு வந்து தரிசனம் செய்து நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர் சிரிய குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அழகு குத்துதல் எலுமிச்சை அணிதல் சங்கிலி இழுத்தல் திருத்தேர் மயானம் புறப்படுதல் மயான கொள்ளை அம்மன் வேடம் காளி வேடம் அணிந்து மயானத்தில் சென்று நேர்திக்கடன் நிறைவு செய்கின்றனர்

ஆட்டோ கார் போன்ற வாகனங்களை இழுத்து நேர்த்திக்கடன் செலுத்தி வருகின்றனர் திருவிழாவை காண பல்வேறு ஊர்களில் இருந்து பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்கின்றனர் காவேரிப் பட்டணம் போலிசார் திருவிழாவிற்க்கு வரும் பக்தர்கள் எந்த இடையூறும் இல்லாமல் திருவிழா வை காண ஆங்காங்கே ஒலி பெருக்கி மூலம் எச்சரிக்கை செய்து நடையாக நடந்து வரும் பக்தர்களுக்கு டிராக்டர் மூலம் நடை பாதையில் தண்ணீர் ஊற்றி குளிர வைக்கின்றனர்.

நீர் மோர் பாணகம் உணவு தன்னீர் பாட்டில்கள் ஒரு சில தன்னார்வ தொண்டுகள் மூலம் ஏற்பாடு செய்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப் படுகிறது.

## அவசரம்,அவசரமாக 50 கருங்கல் குவாரிகள் ஏலம்.

# அன்புமணி குற்றச்சாட்டு : கிடைத்தவரை சுருட்டும் முயற்சியில் திமுக.



சேலம். பிப்.17–

தமிழ்நாட்டில் சேலம், ராணிப்பேட்டை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் 50 கருங்கல் குவாரிகளை புதிதாகத் திறக்க திமுக அரசு அவசர,அவசரமாக ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரியுள்ளது.

தமிழக வரலாற்றில் ஒரே மாதத்தில் இவ்வளவு குவாரிகள் ஏலம் விடப்பட்டதில்லை எனும் நிலையில், 50 குவாரிகளுக்கு குத்தகை வழங்குவதிலிருந்தே திமுக அரசு கிடைத்தவரை சுருட்டும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது உறுதியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் உரிமம் பெற்று 1845 கருங்கல் குவாரிகள், சட்டவிரோதமாக 2000க்கும் மேற்பட்ட குவாரிகள் என 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கருங்கல் குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கல்குவாரிகள் அனைத்திலுமே விதிகளை மீறி கனிமவளங்கள் வெட்டி எடுக்கப்பட்டு கடத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில் தான் கூடுதலாக 50 குவாரிகளுக்கு உரிமம் வழங்க திமுக அரசு முடிவு செய்துள்ளது.

சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தேனி, திண்டுக்கல், ராணிப்பேட்டை ஆகிய 6 மாவட்டங்களில் இந்த குவாரிகள் அமைக்கப்படவுள்ளன. இந்த குவாரிகளுக்கு குத்தகை உரிமம் வழங்குவதற்கான ஏல ஒப்பந்த அறிவிப்புகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் வெளியிட்டுள்ளனர். முடிந்தவரை தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்பாகவே குத்தகை வழங்குவதற்கான நடைமுறைகளை முடிக்க திமுக அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கலெக்ஷன், கமிஷன், கரப்ஷன் ஆகியவற்றை மட்டுமே கொள்கையாகக் கொண்ட திமுக அரசு இதுபோன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதில் எந்த வியப்பும் இல்லை.

ஆட்சிக்காலத்தின் கடைசி கட்டத்தில் இருக்கும் எந்த அரசும் இவ்வளவுக் கொள்ளை அடித்ததில்லை என்று கூறும் அளவுக்கு திமுக அரசு கடைசி நேரக் கொள்ளைகளில் ஈடுபட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நடைபெறும் மிகப்பெரிய ஊழல்கள் என்றால், அது ஆற்று மணல் கொள்ளையும், இயற்கை வளக் கொள்ளையும் தான். இந்தக் கொள்ளைகளில் ஆண்டு மதிப்பு ரூ.80 ஆயிரம் கோடிக்கும் அதிகம் என்று கூறப்படுகிறது. மக்கள் நலனிலும், நேர்மையான நிர்வாகத்திலும் திமுக அரசுக்கு அக்கறை இருந்திருந்தால், இயற்கைவளக் கொள்ளைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும். ஆனால், அதை திமுக செய்யவில்லை.

மாறாக, கனிமவளக் கொள்ளையர்களின் கனிமக் கொள்ளைக்கு துணை போகும் வகையில் பாவ மன்னிப்பு வழங்கும் திட்டத்தை திமுக அரசு அண்மையில் செயல்படுத்தியுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் உரிமம் பெற்ற குவாரிகளில் அளவுக்கு அதிகமாக கொள்ளையடிக்கப்பட்ட கனிமங்களுக்கு ராயல்டி தொகையாக டன்னுக்கு ரூ.25 நிர்ணயம் செய்யப்பட்டு, அத்துடன் இரு மடங்கு தொகையை சேர்த்து, அதாவது மொத்தமாக ஒரு டன்னுக்கு ரூ.75 செலுத்தி விட்டால் கனிமக் கொள்ளையர்கள் மன்னிக்கப்படுவர். உரிமம் பெறாத குவாரிகளில் கனிமக் கொள்ளை நடத்தியவர்கள் ராயல்டி தொகையுடன் 5 மடங்கு அபராதம் சேர்த்து ரூ.150 செலுத்தி விட்டால் அவர்கள் பாவ விமோசனம் பெற்று உத்தமர்களாகி விடுவார்கள். அதுவும் கூட அவர்கள் அந்த அபராதத் தொகையை ஒரே தவணையாகக் கூட செலுத்த வேண்டிய கட்டாயம் இல்லை. அதிகபட்சமாக 24 மாதங்களுக்குள் அபராதத்தை செலுத்தினால் போதுமானது. இதை விட மோசமாக எந்த அரசாலும் கனிமவளக் கொள்ளையர்களுக்கு துணை போகவே முடியாது.

இன்னொரு பக்கம் திமுகவின் சட்டப்பேரவை உறுப்பினராக இருப்பவருக்கு சொந்தமான கல் குவாரிகளில் சட்டவிரோதமாக நடத்தப்படும் கனிமக் கொள்ளைகளை படம் பிடித்த ஊடகவியலாளர்கள் கடத்திச் செல்லப் பட்டு சிறை வைக்கப் படுகிறார்கள். அவர்களை ஆளும் திமுக சட்டமன்ற உறுப்பினரே கொடூரமாகத் தாக்குகிறார். அது குறித்த காணொலி ஆதாரம் வெளிவந்த பிறகும் கூட அந்த சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்படவில்லை. பாமகவும் பிற எதிர்க்கட்சிகளும் குரல் கொடுத்த பிறகு தான் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மீது பெயரளவில் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. அதே நேரத்தில் அதை விட கடுமையான பிரிவுகளில், கனிமக் கொள்ளையை படம் பிடித்து வெளியிட்ட பத்திரிகையாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படி தொடர்ச்சியாக கனிமக் கொள்ளையர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் திமுக அரசு, இப்போது கனிமக் கொள்ளையை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தான் 50 புதிய கல்குவாரிகளுக்கு குத்தகை உரிமம் வழங்கி வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை செயல்பாட்டில் உள்ள கல் குவாரிகளில் பெரும்பாலானவை தனியார் பட்டா நிலங்களில் அமைந்திருக்கும் நிலையில், இப்போது உரிமம் வழங்கப்படும் குவாரிகள் அரசு புறம்போக்கு நிலங்களில் அமைக்கப்படவுள்ளன. இதன் பின்னணியில் பல நூறு கோடி கைமாறியிருப்பதாக கூறப்படுகிறது.

கடைசிநேரத்தில் அனைத்துத் துறைகளிலும் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தப் புள்ளிகளை வழங்குவது, அரசுத் துறைகளில் பணம் இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தி இப்போதே ஒப்பந்தம் வழங்குவது, அவ்வாறு வழங்கப்படும் ஒப்பந்தங்களில் பல ஆயிரம் கோடி ஊழல் செய்வது போன்றவற்றில் திமுக ஈடுபட்டிருப்பதற்கு அண்மைக் காலங்களில் ஏராளமான ஆதாரங்கள் வெளியாகியுள்ளது. அந்த முயற்சிகளில் அடுத்தக் கட்டம் தான் இந்த ஏலம் ஆகும்.

ஆளில்லாத வீட்டில் கிடைத்தவரை சுருட்டுவதைப் போலத் தான் திமுக அரசு கடைசி நேர ஊழல்களிலும், கொள்ளையிலும் ஈடுபட்டு வருகிறது. இதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். கனிமக் கொள்ளை திமுக அரசை வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் விரட்டியடிப்பார்கள்'. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைக்கால் தெற்கு தொகுதி உட்பட்ட கலையங்கட்டி மதகு பகுதியில் ஆற்றங்கரை ஓரத்தில் வசிக்கும் குடியிருப்பு வாசிகள் அடிப்படை வசதிகள் வேண்டி லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களிடம் கோரிக்கை.



புதுச்சேரி, பிப். 17–

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் தெற்கு தொகுதிக்குட்பட்ட கலையங்கட்டி மதகு பகுதியில் ஆற்றங்கரை ஓரத்தில் சுமார் 65 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், அங்கு வசிக்கும் பொதுமக்கள் அடிப்படை வசதிகள் இல்லை என புகார் தெரிவித்தனர். இந்நிலையில் புகாரை தொடர்ந்து காரைக்கால் மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல் பாசித் ஏற்பாட்டில் லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மாட்டின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். மேலும் கூரைகளில் தார்ப்பாய் கொண்டு மூடி வருவதாகவும் மழைக்காலங்களில் சிரமமாக இருப்பதாகவும், கழிவறை வசதிகள் இல்லை எனவும் பள்ளி செல்லும் குழந்தைகள் கைக்குழந்தைகளை வைத்து சிரமப்படுவதாகவும் வேதனையுடன் தெரிவித்தனர். முன்னதாக அங்கு வசிக்கும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இந்த நிலையில் லட்சிய ஜனநாயகத்தின் தலைவர் சார்லஸ் மார்டின் கூறுகையில் சட்டமன்ற உறுப்பினர் வாக்கு சேகரிக்க மட்டும் வராமல் மக்களின் வாழ்வாதாரத்தை தெரிந்து அவர்களது நலத்திட்ட பணிகளை செய்து கொடுக்க வேண்டும் எனவும் இங்கு வசிக்கும் மக்கள் நீண்ட காலமாக பட்டா இல்லாமல் இருக்கின்றனர். ஆற்றங்கரை ஓரத்தில் இருப்பதனால் விஷ பூச்சிகள் விஷ ஜந்துக்களினால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். எனவே தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படை உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென லட்சிய ஜனநாயகரின் கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மாட்டின் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 3 மாதத்திலேயே கலைந்த கரு ஆனால் ஊரே வியக்க வளைகாப்பு.

# 10வது மாதத்தில் கையில் குழந்தை: எஜமான் பாணி நாடகம் நடத்திய சேலம் பெண்.



சேலம். பிப்.17–

திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவ மனையில் அண்மையில் நடந்த ஒரு குழந்தை கடத்தல் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

துறையூரைச் சேர்ந்த சுகன்யா என்பவருக்குப் பிறந்த மூன்று நாட்களே ஆன ஆண் குழந்தையை, மீனாட்சி என்ற பெண் நைசாகப் பேசி கடத்திச் சென்றார். குழந்தைக்குத் தடுப்பூசி போட்டு வருவதாகக் கூறி வாங்கிச் சென்றவர் நீண்ட நேரமாகியும் திரும்பாததால், அதிர்ச்சியடைந்த பெற்றோர் அளித்த புகாரின் பேரில் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். சிசிடிவி காட்சிகளின் உதவியுடன் ஏழு மணி நேரத்திற்குள் சேலம் மாவட்டம் தம்மம்பட்டி அருகே குழந்தையை மீட்ட போலீசார், கடத்தலில் ஈடுபட்ட மீனாட்சியைக் கைது செய்தனர்.

இந்தக் கடத்தலின் பின்னணியில் உள்ள காரணங்கள் அப்படியே 'எஜமான்' படப் பாணியில் அமைந்திருப்பது போலீசாரையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ள மீனாட்சி, கணவரைப் பிரிந்து சுரேஷ் என்பவரை இரண்டாவதாகத் திருமணம் செய்துள்ளார். சுரேஷ் மூலம் கர்ப்பமடைந்த மீனாட்சிக்கு, மூன்று மாதங்களிலேயே எதிர்பாராத விதமாகக் கரு கலைந்துள்ளது. ஆனால், இந்த உண்மையைச் சொன்னால் கணவர் குடும்பத்தினர் தன்னைப் பிரிந்துவிடுவார்களோ என்ற அச்சத்தில், தான் தொடர்ந்து கர்ப்பமாக இருப்பதாகவே நாடகமாடியுள்ளார்.

தன் பொய்யை மெய்ப்பிக்க, கர்ப்பிணிப் பெண் போலவே நடித்து வந்த மீனாட்சிக்கு உறவினர்கள் முன்னிலையில் வளைகாப்பு நிகழ்ச்சியும் விமரிசையாக நடந்துள்ளது. வளைகாப்பு முடிந்து பல மாதங்கள் கடந்த நிலையில், எப்போது குழந்தை பிறக்கும் என்று குடும்பத்தினர் கேட்கத் தொடங்கியுள்ளனர். இதனால் வேறு வழியின்றி, எங்காவது ஒரு குழந்தையைத் திருடி வந்து தன்னுடைய குழந்தை எனச் சொல்லிவிடலாம் எனத் திட்டமிட்டுள்ளார். இதற்காகவே திருச்சி அரசு மருத்துவமனைக்கு வந்து, அங்கு பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த சுகன்யாவிடம் நைசாகப் பழகி இந்தக் கடத்தலை அரங்கேற்றியுள்ளார்.

மீட்கப்பட்ட குழந்தை பத்திரமாகத் தாயிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், மீனாட்சியின் இந்த விசித்திரமான செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு பொய்யை மறைக்கத் தொடர்ச்சியாகப் பொய்கள் சொல்லி, இறுதியில் ஒரு குழந்தையையே கடத்தும் அளவிற்குச் சென்ற அவரது செயல் கடும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. தற்போது போலீசார் மீனாட்சியைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். மருத்துவமனை போன்ற பொது இடங்களில் முன்பின் தெரியாத நபர்களிடம் குழந்தைகளைக் கொடுப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421